

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (7.7.2025) தலைமைச் செயலகத்தில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கீழ் செயல்படும் நகர் ஊரமைப்பு இயக்ககத்தின் சார்பில், கோயம்புத்தூர் உள்ளூர் திட்டப் பகுதியின் இரண்டாவது முழுமைத் திட்டத்தை (Coimbatore Master Plan 2041) வெளியிட்டதற்கும், அரசு அலுவல் நடைமுறைகளில் ஒப்புதல் பெறும் நடவடிக்கைகளை எளிமைப்படுத்தியதற்கும், தமிழ்நாட்டில் முதல் முறையாக இணைய தளம் வாயிலாகச் சுயசான்றிதழ் அடிப்படையில் அதிகபட்சம் 2,500 சதுர அடி பரப்பளவு கொண்ட மனையிடத்தில் 3,500 சதுர அடி அளவிற்குள் கட்டப்படும் குடியிருப்பு கட்டுமானத்திற்கு உடனடி ஒப்புதல் பெறும் சுயசான்றிதழ் திட்டத்தை அறிமுகப்படுத்தி செயல்படுத்தியதற்கும், கிரடாய் கோயம்புத்தூர் தலைவர் எஸ்.ஆர்.அரவிந்த் குமார், துணைத் தலைவர் ராஜீவ் ராமசாமி, பொருளாளர் பி. கார்த்திக் குமார், உறுப்பினர் ஆர்.சந்திரமௌலி, பொது மேலாளர் என்.கே.பாலச்சந்திரன் ஆகியோர் சந்தித்து நன்றி தெரிவித்தனர். இந்நிகழ்வின்போது, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, நகர் ஊரமைப்பு இயக்குநர் பா.கணேசன், தமிழ்நாட்டின் கிரடாய் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள குகன் இளங்கோ, தற்போதைய தலைவர் டபிள்யூ.எஸ். ஹபீப், இணைச் செயலாளர் வி. சதாசிவம், கிரடாய் தேசிய செயற்குழு உறுப்பினர் ஸ்ரீதரன், இணைச் செயலாளர் சுரேஷ் கிருஷ்ணா, கிரடாய் சென்னை தலைவர் ஏ. மொகமது அலி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

### தமிழ்நாட்டைச் சேர்ந்த புத்த, சமண, சீக்கிய சமூகத்தினர்

# புனிதத் தலங்களுக்குச் சென்று வர அரசு நிதி உதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலினை சந்தித்து சிறுபான்மையினர் ஆணைய உறுப்பினர்கள் நன்றி!

**சென்னை, ஜூலை 8 -**

**தமிழ்நாட்டைச் சேர்ந்த புத்த, சமண மற்றும் சீக்கிய சமூகத்தினர் இந்தியாவிலுள்ள தொன்மையான தங்களது புனிதத் தலங்களுக்குச் சென்று வழிபாடு செய்திட அரசு நிதியுதவி வழங்கி ஆணை பிறப்பித்ததற்கு மாநில சிறுபான்மையினர் ஆணைய உறுப்பினர்கள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை சந்தித்து நன்றி தெரிவித்தனர்.**

இது குறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:

தமிழ்நாட்டில் உள்ள முஸ்லிம்கள் புனித தலமான மக்கா மற்றும் மதினா செல்வதற்கும், கிறிஸ்தவர்கள் புனித தலமான ஜெருசலேம் புனித பயணம் மேற்கொள்ளவும் அரசு நிதியுதவி வழங்கி வருவதைபோன்று,

50 புத்த மதத்தினர், 50 சமண மதத்தினர் மற்றும் 20 சீக்கிய மதத்தினர் இந்தியாவில் உள்ள அவரவர் மதங்களுக்கான புனித தலங்களுக்கு புனித பயணம் மேற்கொள்ள ஆண்டுதோறும் நபர் ஒருவருக்கு 10,000 ரூபாய் வீதம், 120 நபர்களுக்கு 12 இலட்சம் ரூபாய் மானியம் வழங்கப்படும் என்று தமிழ்நாடு அரசால் 10.6.2025 அன்று ஆணை வெளியிடப்பட்டது.

தமிழ்நாடு அரசின் சமத்துவ மனப்பாங்கு மற்றும் சமய நல்லிணக்கத்தை எடுத்துக்காட்டும் வகையில், மிகவும் சிறுபான்மை சமூகமான புத்த, சமண மற்றும் சீக்கிய சமூகத்தினர் பயன்பெறும் வகையில், தமிழ்நாட்டைச் சேர்ந்த புத்த, சமண மற்றும் சீக்கிய சமூகத்தினர் இந்தியாவிலுள்ள தொன்மையான தங்களது புனிதத் தலங்களுக்கு சென்று வழிபாடு செய்திட அரசு நிதியுதவி வழங்கி ஆணை பிறப்பித்தமைக்காக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (7.7.2025) தலைமைச் செயலகத்தில், மாநில சிறுபான்மையினர் ஆணைய உறுப்பினர்கள் பொன். ராஜேந்திர பிரசாத், பிரவீன் டாட்டியா மற்றும் ரமீத் குமார் ஆகியோர் சந்தித்து, நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

இந்நிகழ்வின்போது, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு. நாசர், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் ஆகியோர் உடனிருந்தனர்.

இவ்வாறு தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (7.7.2025) தலைமைச் செயலகத்தில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கீழ் செயல்படும் நகர் ஊரமைப்பு இயக்ககத்தின் சுய சான்றிதழ் திட்டத்தில் கட்டட அனுமதிக்கான ஆணைகளைப் பெற்று பயன்பெற்ற பயனாளிகள் சந்தித்து ஆணைகளை காண்பித்து நன்றி தெரிவித்துக் கொண்டனர். இந்த நிகழ்வின்போது, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு. முத்துசாமி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, நகர் ஊரமைப்பு இயக்குநர் பா. கணேசன்ஆகியோர் உடனிருந்தனர்.

### இரட்டைமலை சீனிவாசன் ஏற்றிய

# உரிமைச் சுடரை அணையாமல் பாதுகாப்போம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

**சென்னை, ஜூலை 8 -**

**“இரட்டைமலை சீனிவாசன் ஏற்றிய உரிமைச் சுடரை அணையாமல் பாதுகாப்போம்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.**

திவான் பகதூர் திராவிடமணி இரட்டைமலை சீனிவாசன் அவர்களின் பிறந்தநாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:

கல்வியை மட்டும் பெற்றுவிட்டால், அதைக் கொண்டு எந்த அளவுக்குச் சமூக இழிவுகளைக் களைந்து புரட்சி செய்யலாம் நம் உரிமைகளை வென்றெடுக்கலாம் என்பதற்கான மிகச் சிறந்த எடுத்துக்காட்டு திராவிட மணி இரட்டைமலை சீனிவாசனார் அவர்கள்!

அவரது பிறந்தநாளில், ஒடுக்கப்பட்ட மக்களுக்காக அவர் ஆற்றிய ஒப்பற்ற பணிகளைப் போற்றி நினைவு கூர்கிறேன்!

அவர் பிறந்த செங்கல்பட்டு மாவட்டத்தில், கடந்த ஆண்டு திருவுருவச் சிலையுடன் கூடிய நினைவு மண்டபத்தினைத் திறந்து வைத்து, இரட்டைமலையாரைக் கொண்டாடிய நமது திராவிட மாடல் அரசு என்றும் அவர் ஏற்றிய உரிமைச் சுடரை அணையாமல் பாதுகாக்கும்!

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

### “சமத்துவம் கூட்டுறவின் மகத்துவம்” என்ற தலைப்பில்

# சென்னையில் மினி மாரத்தான் போட்டி!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தொடங்கி வைத்தார்!

*சென்னை, ஜூலை 8 -*

சர்வதேச கூட்டுறவு ஆண்டு 2025 மற்றும் சர்வதேச கூட்டுறவு நாள் கொண்டாட்டத்தை முன்னிட்டு தமிழக கூட்டுறவுத் துறை சார்பில் மினி மாரத்தான் போட்டி சென்னை தீவுத்திடலில் நேற்று முன்தினம் நடந்தது. இப்போட்டியினை கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் கொடி அசைத்து துவக்கி வைத்தார். “சமத்துவம் கூட்டுறவின் மகத்துவம்” மினி மாரத்தான் சென்னை தீவுத்திடலில் இருந்து தொடங்கி வெற்றி போர் நினைவுச்சின்னம், அண்ணா சதுக்கம், விவேகானந்தர் இல்லம் வரை சென்று மீண்டும் அதே பாதையில் தீவுத்திடல் வந்தடைந்தது.

இதில் 18 வயது முதல் 40 வயது உடையவர்கள், மேலும் 40 வயது முதல் அதற்கு மேற்பட்டவர்கள் என இரு பிரிவாக 2000க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர். 5 கி.மீ வரை சென்று தன் திறமையினை வெளிக்காட்டிய ஆண்கள், பெண்கள் என இருபாலருக்கும், பரிசுகளும், பதக்கமும், சான்றிதழும் வழங்கப்பட்டது.

18 வயது முதல் 40 வயது வரை போட்டியில் கலந்து கொண்டவர்களில் ஆண்கள் முதல் பரிசாக தலா ரூ.30,000, இரண்டாம் பரிசாக ரூ,20,000, மூன்றாம் பரிசாக ரூ,10,000 என வழங்கப்பட்டது. முதல் பரிசு சுனில், இரண்டாம் பரிசு ரோஜஸ்ரீத் ராமா, மூன்றாம் பரிசு ஜய்ஸ் பட்டில் பெற்றனர். ஆண்கள் பிரிவில் 40 வயதிற்கு மேற்பட்டவர்கள் போட்டியில் முதல் பரிசாக தலா ரூ.30,000, இரண்டாம் பரிசாக ரூ,20,000, மூன்றாம் பரிசாக ரூ,10,000 வழங்கப்பட்டது. முதல் பரிசை பாஸ்கர் கம்பெல், இரண்டாம் பரிசு அன்பரசு, மூன்றாம் பரிசு ராஜ்குமார் மயூயா பிடித்தனர்.18 வயது முதல் 40 வயது வரை போட்டியில் கலந்து கொண்டவர்களில் பெண்கள் முதல் பரிசாக தலா ரூ.30,000, இரண்டாம் பரிசாக ரூ,20,000, மூன்றாம் பரிசாக ரூ,10,000 வழங்கப்பட்டது.

முதல் பரிசை அன்கிட்டபென் ரமேஷ்பாய், இரண்டாம் பரிசு லதா, மூன்றாம் பரிசை அனுபிரியா பிடித்தனர். பெண்கள் 40 வயதிற்கு மேற்பட்டவர்கள் போட்டியில் முதல் பரிசாக தலா ரூ.30,000, இரண்டாம் பரிசாக ரூ,20,000, மூன்றாம் பரிசாக ரூ,10,000 வழங்கப்பட்டது. முதல் பரிசை வசந்தியும், இரண்டாம் பரிசு ஷியாமளா, மூன்றாம் பரிசு நீலா பிடித்தனர். ஆண்கள் பிரிவில் முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசினை அமைச்சர் மா.சுப்பிரமணியன் காசோலை மற்றும் பதக்கம் வழங்கி பாராட்டினார்.

பெண்கள் பிரிவில் முதல், இரண்டாம், மூன்றாம் இடத்தை பிடித்தவர்களுக்கு அமைச்சர் பி.கே. சேகர்பாபு காசோலை மற்றும் பதக்கம் வழங்கி பாராட்டினார். பங்கு பெற்ற அனைவருக்கும் பதக்கம் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் கூட்டுறவு உணவு (ம) நுகர்வோர் பாதுகாப்புத்துறை செயலாளர் சத்யபிரதசாகு, கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் க.நந்தகுமார், கூடுதல் பதிவாளர் (நுகர்வு பணிகள்) ச.பா.அம்ரித், மேயர் ஆர். பிரியா, ஆகியோர் மற்றும் கூட்டுறவு சங்கங்களின் கூடுதல் பதிவாளர்கள், துணைப் பதிவாளர்கள், உள்ளிட்ட அலுவலர்கள், கூட்டுறவாளர்கள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



கூட்டுறவுத் துறை சார்பில் சென்னையில் நடைபெற்ற மாரத்தான் போட்டியை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தொடங்கி வைத்தார். உடன் அமைச்சர் பி.கே.சேகர்பாபு உள்ளார்.

### அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில்

# நடப்பு கல்வியாண்டிற்கு 20% கூடுதல் மாணாக்கர் சேர்க்கை இடங்கள் !

## உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் அறிவிப்பு!



*சென்னை, ஜூலை 8 -*

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மாணாக்கர்கள் அதிகளவில் விண்ணப்பித்து சேர்க்கைக்காக காத்திருப்பதை அறிந்து, முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி 2025-26 கல்வியாண்டிற்கு மாணாக்கர்கள் உயர்கல்வி பெற 20% கூடுதல் மாணாக்கர் சேர்க்கை இடங்கள் வழங்கப்படும் என உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து உயர்கல்வித் துறை அமைச்சர் தெரிவித்துள்ளதாவது:

முதலமைச்சர் அவர்கள் உயர்கல்வியும், மருந்துவமும் தனது இருகண்களாக கொண்டு நமது இளைய சமுதாயம் உலகளவில் உயர்ந்த நிலையில் திகழ வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு உயர்கல்வி அனைவருக்கும் சென்றடைய வேண்டும் என்பதால் புதுமைப்பெண், தமிழ்ப் புதல்வன் போன்ற முத்தான திட்டங்களை வழங்கியதுடன் திறன் மிகுந்த சமுதாயத்தை உருவாக்க நான் முதல்வன் திட்டத்தின் கீழ் பல்வேறு திறன் மேம்பாட்டு பயிற்சிகளை இலவசமாக திறன் மேம்பாட்டு துறையின் மூலம் வழங்கி வருகிறார்.

இதனால் கடந்த நான்காண்டுகளில் உயர்கல்வி சேர்க்கை பெறும் மாணாக்கர்களின் எண்ணிக்கை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. இந்தியாவிலேயே மாணாக்கர் சேர்க்கை விகிதத்தில் தொடர்ந்து தமிழ்நாடு முதன்மை மாநிலமாக விளங்கி வருகிறது.

இவ்வாண்டும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் சேர்க்கைக்காக அதிகளவில் மாணாக்கர்கள் விண்ணப்பித்து காத்திருக்கின்றனர். இதனை அறிந்திருந்த நமது முதலமைச்சர் அவர்கள் இவ்வாண்டு புதிதாக 15 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்கிட ஆணையிட்டு, தற்போது தொடங்கப்பட்டுள்ளன. இருப்பினும் உயர் கல்வி பயில பெருமளவில் மாணாக்கர்கள் காத்திருப்பதை அறிந்து அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு கூடுதலாக 20% மாணவர் சேர்க்கை இடங்கள் உயர்த்தி வழங்கவும், அதேபோல் அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு 15% இடமும், சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு 10% இடமும் கூடுதலாக மாணவர் சேர்க்கை இடங்கள் உயர்த்தி வழங்கவும் முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள்.

அதன்படி, இவ்வாண்டு மேற்படி கூடுதல் இடங்கள் அறிவிக்கப்படுகிறது. மாணாக்கர்கள் இந்த நல்வாய்ப்பினை பயன்படுத்தியும், முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளிய கிராமப்புற மாணாக்கர்கள் உயர் கல்வியில் சிறந்து விளங்க அறிவித்துள்ள அனைத்து நலத்திட்ட உதவிகளையும் பெற்று பெற்றோர்களுக்கும், தமிழ்நாட்டிற்கும் பெருமை சேர்த்து தங்களது வாழ்வில் முன்னேற்றம் பெற வாழ்த்துகிறேன்.

இவ்வாறு உயர்கல்வித் துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.




திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் திருவள்ளூர் மற்றும் திருத்தணி தொகுதிக்குட்பட்ட BLA 2 பாக முகவர்கள் ஆலோசனை கூட்டம் மாவட்டக் கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. இதில் கழக துணை பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி., சிறுபான்மை மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் ஆகியோர் கலந்து கொண்டு சட்டமன்ற தேர்தல் பணிகள் குறித்து பல்வேறு ஆலோசனை வழங்கினார்கள். உடன் திருவள்ளூர் சட்ட மன்ற உறுப்பினர் வி.ஜி. ராஜேந்திரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி, தொகுதி பார்வையாளர்கள் பெ.சேகர், சண்முகநாதன், நிர்வாகிகள் கே.திராவிடபக்தன், ஒ.ஏ.நாகலிங்கம், குருதாஸ், உதயமலர் பாண்டியன், சி.ஜெயபாரதி, ப.சிட்டிபாபு, கே.என்.சுப்பிரமணி, ஒன்றிய செயலாளர்கள் டி.கிறிஸ்டி (எ) அன்பரசு, ஆர்த்தி ரவி, உள்பட ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள் BLA2 பாக முகவர்கள் உள்ளனர்.